ஶ்ரீ:

ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஶ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ தொண்டூர் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஶ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ தொண்டீர் ॥

## திருக்கண்ணபுரம் - 6

‡தொண்டீர்! உய்யும் வகை கண்டேன்⋆
துளங்கா அரக்கர் துளங்க⋆ முன்
திண் தோள் நிமிரச் சிலை வளையச்⋆
சிறிதே முனிந்த திருமார்பன்⋆
வண்டார் கூந்தல் மலர் மங்கை⋆
வடிக் கண் மடந்தை மான் நோக்கம்
கண்டான்⋆ கண்டு கொண்டுகந்த⋆
கண்ணபுரம் நாம் தொழுதுமே (1)

பொருந்தா அரக்கர் வெஞ்சமத்துப்⋆
பொன்ற அன்று புள்ளூர்ந்து⋆
பெருந் தோள் மாலி தலை புரளப்⋆
பேர்ந்த அரக்கர் தென்னிலங்கை⋆
இருந்தார் தம்மையுடன் கொண்டு⋆
அங்கெழிலார் பிலத்துப் புக்கொளிப்ப⋆
கருந்தாள் சிலைகைக் கொண்டானூர்⋆
கண்ணபுரம் நாம் தொழுதுமே (2)

வல்லியிடையாள் பொருட்டாக⋆
மதிள் நீர் இலங்கையார் கோவை⋆
அல்லல் செய்து வெஞ்சமத்துள்⋆
ஆற்றல் மிகுத்த ஆற்றலான்⋆
வல்லாள் அரக்கர் குலப்பாவை
வாட⋆ முனி தன் வேள்வியைக்⋆
கல்விச் சிலையால் காத்தானூர்⋆
கண்ணபுரம் நாம் தொழுதுமே (3)

www.dravidaveda.org / www.prapatti.com

மல்லை முந்நீர் அதர் பட⋆
    வரி வெஞ்சிலை கால் வளைவித்து⋆
கொல்லை விலங்கு பணிசெய்யக்⋆
    கொடியோன் இலங்கை புகலுற்று⋆
தொல்லை மரங்கள் புகப்பெய்து⋆
    துவலை நிமிர்ந்து வானணவ⋆
கல்லால் கடலை அடைத்தானூர்⋆
    கண்ணபுரம் நாம் தொழுதுமே (4)

ஆமையாகி அரியாகி⋆
    அன்னம் ஆகி⋆ அந்தணர் தம்
ஓமமாகி ஊழியாகி⋆
    உலகு சூழ்ந்த நெடும் புணரி⋆
சேம மதிள் சூழ் இலங்கைக்கோன்⋆
    சிரமும் கரமும் துணித்து⋆ முன்
காமற் பயந்தான் கருதுமூர்⋆
    கண்ணபுரம் நாம் தொழுதுமே (5)

வருந்தாதிருநீ மட நெஞ்சே⋆
    நம்மேல் வினைகள் வாரா⋆ முன்
திருந்தா அரக்கர் தென்னிலங்கை⋆
    செந்தீ உண்ணச் சிவந்தொருநாள்⋆
பெருந்தோள் வாணற்கருள் புரிந்து⋆
    பின்னை மணாளன் ஆகி⋆ முன்
கருந்தாள் களிறொன்றொசித்தானூர்⋆
    கண்ணபுரம் நாம் தொழுதுமே (6)

இலையார் மலர்ப் பூம் பொய்கைவாய்⋆
    முதலை தன்னால் அடர்ப்புண்டு⋆
கொலையார் வேழம் நடுக்குற்றுக் குலைய⋆
    அதனுக்கருள் புரிந்தான்⋆
அலைநீர் இலங்கைத் தசக்கிரீவற்கு⋆
    இளையோற்கரசை அருளி⋆ முன்



www.prapatti.com

கலைமாச் சிலையால் எய்தானூர்⋆
    கண்ணபுரம் நாம் தொழுதுமே (7)

மாலாய் மனமே! அருந்துயரில்⋆
    வருந்தாதிருநீ⋆ வலிமிக்க
காலார் மருதும் காய் சினத்த
    கழுதும்⋆ கதமாக் கழுதையும்⋆
மாலார் விடையும் மதகரியும்⋆
    மல்லர் உயிரும் மடிவித்து⋆
காலால் சகடம் பாய்ந்தானூர்⋆
    கண்ணபுரம் நாம் தொழுதுமே (8)

குன்றால் மாரி பழுதாக்கிக்⋆
    கொடியேர் இடையாள் பொருட்டாக⋆
வன்தாள் விடையேழ் அன்றடர்த்த⋆
    வானோர் பெருமான் மா மாயன்⋆
சென்றான் தூது பஞ்சவர்க்காய்⋆
    திரி காற் சகடம் சினமழித்து⋆
கன்றால் விளங்காய் எறிந்தானூர்⋆
    கண்ணபுரம் நாம் தொழுதுமே (9)

‡கருமா முகில் தோய் நெடு மாடக்⋆
    கண்ணபுரத்தெம் அடிகளை⋆
திருமா மகளால் அருள்மாரி⋆
    செழுநீர் ஆலி வள நாடன்⋆
மருவார் புயற் கைக் கலிகன்றி⋆
    மங்கை வேந்தன் ஒலி வல்லார்⋆
இருமா நிலத்துக்கரசாகி⋆
    இமையோர் இறைஞ்ச வாழ்வாரே (10)

‖ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ‖

www.prapatti.com